# வருடாந்த அறிக்கை

# 2012

## கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

## களனிப் பல்கலைக்கழகம்

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்

யக்கலை

# வருடாந்த அறிக்கை

# 2012

## கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடம்

## களனிப் பல்கலைக்கழகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1995 மார்ச் 13ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 862/8 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக 1978 இல.16 பல்கலைக்கழக சட்டத்தின் 24 அ(2) மற்றும் 24(ஆ) வின் கீழ் 1995 இல 01 என்ற கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை நிறுவுவதைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.அதனூடாக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயர் கல்விப்பீடமாக நிறுவப்பட்டுள்ளது.

அந்த பிரகடனத்தில் ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகிய 5வருட பட்டப்பாடனெரிகளை நடாத்துவது முக்கியமான நோக்கமாக உள்ளது.

அதற்கமைய 1995 மார்ச் 01ம் திகதி முதல் உயர் கல்விப்பீடமாக நடாத்திச்செல்லும் இந்த நிருவகத்தின் 2012ம் ஆண்டுக்கான நிருவக நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கிய அறிக்கை,இறுதி கணக்கறிக்கை மற்றும் 2011 ஆண்டுக்காக இந்த நிருவகம் சம்பந்தமான அரச கணக்காய்வாளரால் தரப்பட்ட அறிக்கையையும் இத்துடன் முன்வைக்கின்றேன்.

**பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே**
**பணிப்பாளர்**

.

## பணிப்பாளரின் அறிக்கை

நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பாட்டுப் பணிகளை எட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட 2012 – 2016 வரையான இணைந்த திட்டத்தை இந்நிறுவனத்தின் 2012.04.19ம் திகதி இடம் பெற்ற 193வது முகாமைத்துவ சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பட்டத்தை எதிர்பார்க்கும் மாணவர்கள் மற்றும் பணியாளர் சபையின் செயற்சாதனையை மதிப்பீடு செய்யக்கூடிய மட்டத்தை எட்ட முடியும் என மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இணைந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டும் போது தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக ஒரு சில இலக்குகளை எட்டத் தவறியதாகக் குறிப்பிட வேண்டும்.

இணைந்த திட்டத்தை மறுசீரமைப்பதன் மூலம் இணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை ஓரளவு எட்டமுடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே**
**பணிப்பாளர்**

# உள்ளடக்கம்


| | <u>விடயம்</u> | <u>பக்க இலக்கம்</u> |
|---|---|---|
| 01. | நிறுவகத்தின் நோக்கு | 01 |
| 02. | செயற்பணி | 02 |
| 03. | பணிப்பாளரின் செய்தி | 03 |
| 04. | வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல் | 04 |
| 05. | தேசிய மாணவர்கள் பற்றிய தகவல் | 04 |
| 06. | வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய தகவல் | 04 |
| 07. | கல்விசார் பணியாளர் சபையின் தகவல | 05 - 06 |
| 08. | கல்விசாரா பணியாளர் சபையின் தகவல் | 06 |
| 09. | ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம் | 07 |
| 10. | நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம் | 07 - 08 |
| 11. | பெற்ற விருதுகள் பற்றிய விபரம் | 08 |
| 12. | ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல் | 08 - 09 |
| 13. | மீண்டெழும் செலவு விபரங்கள் | 09 |
| 14. | மூலதன செலவு பற்றிய விபரங்கள் | 09 - 10 |
| 15. | செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.·.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு) | 10 |
| 16. | திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம்<br>(உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு ) | 11 |

17. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு) 12

18. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்) 12

19. நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு - 2012 12

20. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2012 இல் கிடைத்தவை 13

21. வேறு விபரங்கள் 13

21.1 நூலகம் . 13

21.2 கணினிப் பிரிவு 13

21.3 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல் 13

22. பணிப்பாளரின் அறிக்கை 14 - 15

23. 2012.12.31 க்கு நிதி நிலைமை பற்றிய அறிக்கை 16 - 18

24. 2012.12.31 உடன் முடிவடையும் வருடத்துக்கான வரவு செலவு பற்றிய அறிக்கை 19 - 20

25. கணக்காய்வாளர் அறிக்கை 21 - 32

26. கணக்காய்வாளர் அறிக்கைக்கான விடைகள் 33 - 36

**1. நிறுவனத்தின் நோக்கு :**

**நோக்கு**

திறமைமிக்க பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம்
ஆயுர்வேத கற்கை தொடர்பில் அதி சிறந்த
மத்திய நிலையமாக திகழ்தல்.

## 2. பணிக்கூற்று :

### பணிக்கூற்று

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கற்கை நிறுவனத்தின் பணிகளாக அமைவது ஆயுர்வேத வைத்திய துறையின் விஞ்ஞான ரீதியிலான அறிவு மற்றும் விளக்கத்தை விருத்தி செய்தல் உட்பட அறிவினை விரிவுபடுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தல்

''இந்நிறுவத்தில் கல்வி பயிலும் மாணவர்களை சகல மட்டங்களிலும் முன்னேற்றுவதற்காக பொருத்தமான சூழலை உருவாக்குதல், ஆயுர்வேத வைத்திய கல்வியில் பிரயோக மற்றும் ஆராய்ச்சியினை விருத்தி செய்வதற்காக பொருத்தமான சூழலை கட்டியெழுப்புதல், இலங்கையின் சுகாதாரத் துறையில் தேவைகளுக்கு ஏற்றவாறு நவீன கற்ப்பித்தல்கள் மற்றும் பயிற்சிகள் ஊடாக அறிவினை எட்டும் வகையில் பிரயோக பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட சூழலை கட்டியெழுப்புதல், அமுலில் உள்ள ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்பாட நெறியில் கட்டமைக்கப்பட்ட மாற்றங்களை தோற்றுவித்து மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக திட்டங்களை வகுத்தல் இலங்கையில் மற்றும் இலங்கைக்கு வெளியே சுகாதாரத் துறையுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பினை கட்டியெழுப்புதல், தேவையான தகைமை மற்றும் ஆர்வம் கொண்ட மானிட வளக்குழுவினை நிறுவனத்தில் உருவாக்குதல்''

### 3. பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி :

#### அ. அறிமுகம்

நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்றினை எட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட 2012 – 2016 வரையான இணைந்த திட்டங்கள் இந்நிறுவனத்தின் 2011.04.19ம் திகதி இடம் பெற்ற 193 வது முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

#### ஆ. வெற்றிகள்

பட்டத்தை எதிர்பார்த்துள்ள மாணவர்கள் மற்றும் கல்வி சார் பணியாளர் சபையின் செயற்சாதனையினை போற்றத்தக்க மட்டத்திற்கு எட்டமுடிந்துள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

#### இ. குறைபாடுகள்

இணைந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டும் போது தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக ஒருசில இலக்குகளை எட்டுவதற்கு முடியவில்லை என்பதனை குறிப்பிட வேண்டும்.

#### ஈ. நிறுவனத்தின் திட்டங்கள்

இணைந்த திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கட்டமைக்கப்பட்ட திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கு குறிப்பிட்ட அளவினால் எதிர்வரும் ஆண்டில் எட்ட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பாடவிதான மறுசீரமைப்பு பணிகள் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டில் அமுல்படுத்தப்பட்டதுடன் 2010 – 2011 கல்வி ஆண்டில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக புதிய பாடவிதானத்திற்கமைய விரிவுரைகளை ஆரம்பிக்க முடிந்தது.

விஞ்ஞான நிறுவனத்தின் பிரதான குறைபாடுகளாக காணப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் 2012ம் ஆண்டு புதிய மின் பிரப்பாக்கியினை பொருத்துவதற்கு முடியும் என எதிர்பார்க்கிறேன்.

நிறுவனத்திற்காக காணப்படும் காணியின் அளவு பற்றாக்குறை என்பதனால் நிறுவனத்தை சூழ உள்ள காணியினை சுவிகரிப்பதற்கான பணிகளின் கோரிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை அது சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல எதிர்பார்க்கிறேன்.

4. வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த கல்வி சார் பணியாளர் சபை | மொத்த கல்வி சாரா பணியாளர் சபை |
|---|---|---|---|---|
| கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத வைத்திய விஞ்ஞான நிறுவகம் | ஆயுர்வேத வைத்திய விஞ்ஞான மற்றும் சத்திர சிகிச்சைப் பட்டம் | 360 (5 வருடங்களுக்குள்) | | |
| முழு மொத்தம் | | 360 | | |

5. உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொழி | ஆட் சேர்ப்பு 2012 | 1வது ஆண்டு மாணவர்கள் | 2வது ஆண்டு மாணவர்கள | 3வது ஆண்டு மாணவர்கள | 4வது ஆண்டு மாணவர்கள | 5வது ஆண்டு மாணவர்கள் | பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத விஞ்ஞான நிறுவகம் | B.A.M.S. | ஆங்கிலம் | - | 93 | | | | | |
| | | சிங்களம் | | | 96 | 83 | 51 | | 37 (பரீட்சை முடிவடையவில்லை |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | 93 | 96 | 83 | 51 | | 37 |

6. வெளிநாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொழி | ஆட் சேர்ப்பு 2012 | 1வது ஆண்டு மாணவர்கள் | 2வது ஆண்டு மாணவர்கள | 3வது ஆண்டு மாணவர்கள | 4வது ஆண்டு மாணவர்கள | பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | | | |

## 7. கல்வி சார் பணியாளர் சபை விபரங்கள் :

| நிறுவனம் | பாடங்கள் | மொழி | சிரேஷ்ட பேராசிரியர்கள் | பேராசிரியர்கள் | சிரேஷ்ட விரிவுரையாளர்கள் | விரிவுரையாளர்கள் | உதவி விரி வுரையாளர்கள் | ஆலோசகர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சத்திர சிகிச்சை சாலக்கிய | சத்திர சிகிச்சை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| | சாலக்கிய | சிங்களம் | - | - | 01 | - | - | - |
| சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | பெண்ணியல் நோய் | சிங்களம் | - | - | 02 | - | 01 | 02 |
| | சிறுவர் நோய் | சிங்களம் | | | | | | |
| | மகப்பேற்று | சிங்களம் | | | | | | |
| திரவ குண விஞ்ஞானம் | திரவ குண விஞ்ஞான | சிங்களம் ஆங்கிலம் | - | 01 | 04 | - | - | கண்காட்சி 03 |
| | சுவைக் கலை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 02 | - | - | |
| | பைசச்ச சிந்தனை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 02 | - | - | |
| ஆயுர்வேத மூலதர்ம | ஹிந்தி<br>ஆங்கிலம்<br>கலாச்சாரம் | ஆங்கிலம் சிங்களம் | -<br>-<br>01 | -<br>-<br>- | -<br>-<br>01 | 01<br>01 | - | |
| | ஜாதிச மூலதர்மம் | சிங்களம் ஆங்கிலம் | - | - | - | 02 | | |
| | பூத விஞ்ஞானம் | சிங்களம் ஆங்கிலம் | | | | 01 | | |
| | மள விஞ்ஞானம் | சிங்களம் ஆங்கிலம் | 01 | | | 02 | | |
| | உடல் அப்பியாசம் | சிங்களம் ஆங்கிலம் | | | | | 01பயிலுநர் | கண்காட்சி 08 |
| | சரீர ரச்சயா நவ்விய | சிங்களம் ஆங்கிலம் | | | | | 01 வெளி<br>01பயிலுநர் | |
| | சரீர செயற்பாட்டு ஆயுர்வேத | சிங்களம் ஆங்கிலம் | - | | | 01 | | |
| | சரீர செயற்பாட்டு ஆயுர்வேத | . | | | | 01 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மள விஞ்ஞானம் | | | | | 02 | - | - |
| சிகிச்சை | நோயியல் ஆய்வு | - | - | - | | | - | - |
| | உடல் சார் சிகிச்சை | | | | | | | |
| | உள்நாட்டு சிகிச்சை | சிங்களம் | | | 01 | | | |
| | அகத்த தந்ர | | | | 07 | | | |
| | சுவஸ்த வூர்த்த | | | | | | 01 பயிலுனர்<br>02 தற்காலிக | 02 |
| | வியாதி வேத | | | | | | | |
| | வோகாரி வைத்திய விஞ்ஞான மற்றும் மூலம்சங்கள் | | | | | | | |
| | ஆராய்ச்சி முறைகள் | | | | | | 01 பயிலுனர | |
| **முழு மொத்தம்** | | | **02** | **01** | **21** | **11** | **08** | **15** |

**8. கல்வி சாரா பணியாளர் சபையின் விபரங்கள் :**

| நிறுவனப்பிரிவு | நிறைவேற்று பணியாளர் சபை | சிரேஷ்ட பதவி நிலை | பதவி நிலை | கனிஷ்ட | மொத்த ஊழியர்கள் |
|---|---|---|---|---|---|
| சிகிச்சை | - | 02 | 02 | - | 02 |
| சத்திர சிகிச்சை சாலக்கிய | - | 01 | 01 | - | 01 |
| சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | - | - | 02 | - | 01 |
| திரவக் குண விஞ்ஞானம் | - | - | 03 | 01 | 02 |
| மூலதர்மம் + வைத்திய விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவு | *01 | 01 | 03 | 03 | 01 |
| நிருவாகம் | 02 | 02 | 11 | 07 | 03 |
| பராமரிப்பு | - | 01 | 01 | 04 | 07 |
| பரீட்சை | 01 | 04 | 04 | 01 | 01 |
| கணக்கு | 02 | 03 | 08 | - | 02 |
| நூலகம் | - | - | 03 | 03 | 01 |
| கணணி | - | 02 | 01 | - | 01 |
| **முழு மொத்தம்** | **06** | **16** | **39** | **19** | **22** |

*** சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

9. ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பான விபரங்கள் :

| பாடங்கள் | வெளியீடு | | நிதி உழைப்பு | சமர்ப்பிப்பு |
|---|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | சத்திர சிகிச்சை சாலக்கிய<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>மூல தர்மம்<br>திரவ குண விஞ்ஞானம் | 04<br>15<br>18 | 01<br>01 | 01<br>02<br>20 |
| ஆ. புதிய கண்டுபிடிப்புக்கள் | சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | 01 | | |
| இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | | | | |
| ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை | சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | 01 | | |
| உ. ஆவணங்களின் எண்ணிக்கை | சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>திரவ குண விஞ்ஞானம்<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | 05<br>05 | | 02 |
| ஊ. ஏனையவை | சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>(DVD) | 13 | ரூபா. 6000.00 | |
| **முழு மொத்தம்** | | **62** | | **25** |

10. நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் தொடர்பான விபரங்கள் :

| பாடங்கள் | பங்கேற்பு | பூரணப்படுத்தப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவைகள் |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட வேலைத்திட்டங்கள்<br>சத்திர சிகிச்சை சாலக்கிய சிகிச்சை | -<br>16 | | |
| ஆ. பட்டப்பின் டிப்ளோமா வேலைத்திட்டங்கள்<br>சிகிச்சை | 05 | | |
| இ. பட்ட வேலைத் திட்டங்கள்<br>சிகிச்சை மூல தர்மம் | 06<br>- | -<br>01 | |
| ஈ. டிப்ளோமா வேலைத்திட்டங்கள்<br>சிகிச்சை | 08 | | |
| உ. சான்றிதழ் பாடநெறி வேலைத்திட்டங்கள்<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>திரவக் குண விஞ்ஞானம் | -<br>- | 01<br>- | 03<br>- |
| ஊ. ஏனையவை<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>திரவக் குண விஞ்ஞானம்<br>மூல தர்மம் | -<br>-<br>25 | 06<br>-<br>06 | |
| **மொத்த எண்ணிக்கை** | **60** | **14** | **03** |

11. விருதுகள் பெற்றுக் கொண்டமை தொடர்பான விபரங்கள் :

| | விடயங்கள் | விருதுகளின் எண்ணிக்கை | கல்வி சார் பணியாளர் சபை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அ. உள்நாட்டு விருது | சத்திர சிகிச்சை சாலக்கிய திரவக் குண விஞ்ஞானம் | 01 | ✓ | |
| ஆ. தேசிய விருது | சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | | | |
| இ. சர்வதேச விருது | சத்திர சிகிச்சை சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | 01 | ✓ | |
| ஈ. ஏனையவை | | | | |
| **மொத்த எண்ணிக்கை** | | 02 | | |

12. ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் :

| கற்கைப்பிரிவு | பாடநெறி | மொழி | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | பட்டப்பின் பட்டம் | தத்துவமானி | முது மானி |
|---|---|---|---|---|---|---|---|---|
| சந்திர சிகிச்சை சாலக்கிய | யோகா | | | ✓ | | | | |
| சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | | | | | | | | |
| திரவக் குண விஞ்ஞானம் | | | | | | | | |
| பட்டப்பின் பட்டப் பிரிவு | | | | | | | | |
| **மொத்த எண்ணிக்கை** | | | | | | | | |

13. **மீண்டெழும் செலவினம் தொடர்பான விபரங்கள் :**

| **விடயங்கள்** | **2011** | **2012** |
|---|---|---|
| அ. சம்பளம், கொடுப்பனவு | 95,133,199 | 103,904,513 |
| ஆ. பிரயாணச் செலவு | 189,848 | 191,069 |
| இ. விநியோகம் | 5,527,468 | 6,738,429 |
| ஈ. பராமரிப்பு | 2,957,349 | 2,957,210 |
| உ. கணக்கீட்டுச் சேவை | 16,590,316 | 21,714,708 |
| ஊ. ஏனையவை | 4,928,760 | 4,570,415 |
| **மொத்த எண்ணிக்கை** | **125,326,940** | **140,076,344** |

14. **மூலதனச் செலவினம் தொடர்பான விபரங்கள் :**

| **விடயங்கள்** | **2011** | **2012** |
|---|---|---|
| மூலதன சொத்துக்களை விருத்தி செய்தல் | 2,670,506 | 5,020,467 |
| சொத்துக்களை கொள்வனவு செய்தல் | 7,379,375 | 9,147,244 |
| நிர்மானிப்பு | 92,979,290 | 32,758,339 |
| ஏனையவை | - | 3,272,038 |
| **முழு மொத்தம்** | **103,029,171** | **50,198,088** |

15. செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு) :

| பெயர் மற்றும் விபரங்கள் | கடன் / உதவி | உதவி வழங்கும் நிறுவனம் | மொத்த செலவினம் | நிதியக் கிடைப்பனவுகள் | % அளவு |
|---|---|---|---|---|---|
| வைத்தியர் பந்துல குணவர்தன வீர சூரிய | 700,000.00 | NCAS | 699,992.24 | 700,000.00 | 100 |
| வைத்தியர் டப். ஏ. எல் சந்திரசிறி | 687,150.00 | NCAS | 528,351.28 | 687,150.00 | 77 |
| வைத்தியர் எஸ். எம். எஸ் சமரகோன் | 287,470.79 | NCAS | 219,747.79 | 287,470.79 | 76 |
| திரு கே. எம் சந்திமால் | 250,000.00 | U.G.C. Research Fund | 250,000.00 | 250,000.00 | 100 |
| வைத்தியர் திஸ்ஸ ஹேவாவிதான | 382,140.00 | U.G.C. Research Fund | 382,140,00 | 382,140.00 | 100 |
| வைத்தியர் எச். எஸ் சகுந்தலா | 250,000.00 | U.G.C. Research Fund | 225,295.04 | 250,000.00 | 90 |
| வைத்தியர் ரூபா மதநாயக்க | 250,000.00 | U.G.C. Research Fund | 221,918.91 | 250,000.00 | 89 |
| வைத்தியர் ஏ. ஏ. ஜே புஸ்பகுமார | 250,000.00 | U.G.C. Research Fund | 250,000.00 | 250,000.00 | 100 |
| வைத்தியர் ஜே. எம். பீ. ஆா. கே. ஜெயசிங்க | 250,000.00 | U.G.C. Research Fund | 212,177,58 | 250,000.00 | 85 |
| வைத்தியர் ஜே. ஏ. டி. பீ. பீ. ஜெயகொடி | 250,000.00 | U.G.C. Research Fund | 249,442.86 | 250,000.00 | 100 |
| வைத்தியர் எஸ். பீ. பக்கும்புற | 250,000.00 | U.G.C. Research Fund | 250,000.00 | 250,000.00 | 100 |
| திரு. எஸ். ஏ. ஆர். பீ. திசாநாயக்க | 55,000.00 | U.G.C. Research Fund | 55,000.00 | 55,000.00 | 100 |

16. செயற்றிட்ட செலவினங்கள் தொடர்பான விபரங்கள் : (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்புக்கள்) :

| பெயர் | மொத்த செலவினம் | செலவினம் 2011 | செலவினம் 2012 | திரண்ட செலவினம் 2012.12.31ம் திகதியன்று | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| வைத்தியர் பந்துல குணவர்தன வீர சூரிய | 655,092.24 | 44,900.00 | - | 699,992.24 | 100 |
| வைத்தியர் டப். ஏ. எல் சந்திரசிறி | 528,351.28 | - | - | 528,351.28 | 77 |
| வைத்தியர் எஸ். எம். எஸ் சமரகோன் | 219,747.79 | - | - | 219,747.79 | 76 |
| திரு கே. எம் சந்திமால் | 64,322.80 | 185,677.20 | - | 250,000.00 | 100 |
| வைத்தியர் திஸ்ஸ ஹேவாவிதான | 223,591.00 | 158,549.00 | - | 382,140.00 | 100 |
| வைத்தியர் எச். எஸ் சகுந்தலா | 213,849.90 | 44,445.14 | - | 225,295.04 | 90 |
| வைத்தியர் ரூபா மதநாயக்க | 200,256.00 | 21,662.91 | - | 221,918.91 | 89 |
| வைத்தியர் ஏ. ஏ. ஜே புஸ்பகுமார | 23,724.65 | 207,882.73 | 18,392.62 | 250,000.00 | 100 |
| வைத்தியர் ஜே. எம். பீ. ஆா. கே. ஜெயசிங்க | 44,055.38 | 95,522.20 | 72,600.00 | 212,177.58 | 50 |
| வைத்தியர் ஜே. ஏ. டி. பீ. பீ. ஜெயகொடி | 14,500.00 | 221,942.86 | 13,000.00 | 249,442.86 | 100 |
| வைத்தியர் எஸ். பீ. பக்கும்புற | 41,868.25 | 207,938.68 | 193.15 | 250,000.00 | 100 |
| திரு. எஸ். ஏ. ஆா். பீ. திசாநாயக்க | 12,000.00 | - | 43,000.00 | 55,000.00 | 100 |

17. நிதி நிலைமைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான விபரங்கள் (செலவினம்) :

| **விடயங்கள்** | **2012 ஒதுக்கீடு** | **2012 செலவினம்** | **எஞ்சியவை / தாண்டிய (எல்லையைத் தாண்டல்)** |
|---|---|---|---|
| அ. மீண்டெழும் | 127,600.000.00 | 140,076,344.00 | |
| ஆ. மூலதனம் | 25,660,000.00 | 50,198,088.00 | 2011ம் ஆண்டின் எஞ்சிய ஒதுக்கீடுகள் செலவிடப்பட்டுள்ளன. |
| இ. செயற்றிட்டம் - உள்நாட்டு உதவி | - | - | |
| ஈ. செயற்றிட்டம் - வெளிநாட்டு உதவி | - | - | |
| **மொத்த எண்ணிக்கை** | **153260000.00** | **190274432.00** | |

18. நிதி நிலைமைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான விபரங்கள் (உள்ளக வருமானம்) :

| **வருமானத்தின் தன்மை** | **ஒதுக்கீடு / ஒதுக்கீட்டு மதிப்பீடு** | **கிடைப்பனவு 2012** | **குறைவு / அதிகரிப்பு** |
|---|---|---|---|
| அ. பட்ட எதிர்பார்ப்பு | 4,731,000.00 | 6,496,711.00 | - |
| ஆ. பட்டப்பின் பட்டம் | - | - | - |
| இ. ஆலோசனை | - | - | - |
| ஈ. ஏனையவை – பாடநெறி நிதி | 4,860,000.00 | 9,283,946.00 | - |
| **முழு மொத்தம்** | **9,591,000.00** | **15,780,657.00** | - |

19. நிதி செயற்பாட்டுப் பகுப்பாய்வு - 2012 :

| **விடயங்கள்** | **குறியீடு** | **ஒரு மாணவரின் செலவினம்** |
|---|---|---|
| அ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ) / மாணவர் எண்ணிக்கை | - | 384,825.00 |
| ஆ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ) / மாணவர் எண்ணிக்கை | - | 137,907.00 |
| **மொத்த எண்ணிக்கை** | - | **522732.00** |

**20. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2012ம் ஆண்டுக்குள் கிடைப்பனவு :**

| உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்கள் | செலவினம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1. சொத்து மீண்டெழும் மற்றும் முன்னேற்றங்கள் | 5,020,467 | 75% |
| 2. நிர்மாணிப்பு | 32,758,339.00 | 100% |
| **மொத்த எண்ணிக்கை** | **37778806.00** | |

**21. ஏனைய விபரங்கள் (அறிக்கைக்குரிய) :**

**21.1 நூலகம்**

2012ம் ஆண்டில் புத்தக மீள் மதிப்பீட்டு சுருக்கம்

| விபரங்கள் | கொள்வனவு | நன்கொடை | மொத்தம் |
|---|---|---|---|
| புத்தகம் | 497 | 1031 | 1528 |
| சுற்றுலா வெளியீடுகள் | - | - | - |
| பத்திரிகை | - | - | - |

**21.2 கணணிப் பிரிவு**

கணணிப்பிரிவின் செயற்பாடுகளை வெற்றிகரமாக இவ்வாண்டுக்குள் முன்னெடுக்க முடிந்துள்ளதுடன், போதியளவு சேவை மாணவர்களுக்கு மற்றும் பணியாளர் சபைக்கு வழங்க முடிந்துள்ளது.

**21.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

கட்டிடம், நிருவாகக் கட்டிடம் மற்றும் கற்கைப் பிரிவின் கட்டிடங்களின் நிர்மானிப்பிற்கு உரியதான ஆலோசனை சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## பணிப்பாளர் சபை அறிக்கை

1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் கீழ் களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2012ம் ஆண்டுக்குள் நிதி செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கை.

2012ம் ஆண்டுக்காக நிறுவனத்திற்கு பொதுத்திறைசேரியில் விடுவிக்கப்பட்டுள்ள உதவி நிதி கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

**மீண்டெழும் உதவி**

| | | (ரூபா .மில்லியன்) |
|---|---|---|
| அரச மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட நிதி | - | 127.60 |
| ஏனைய மீண்டெழும் வருமானம் | - | 15.78 |
| | - | 143.38 |
| **கூட்டு** | | |
| மூலதனம் | - | 19.74 |
| முழு மொத்தம் (மீண்டெழும்) | - | 163.12 |
| **மூலதன உதவி** | - | **25.66** |

| | | | |
|---|---|---|---|
| செலவினத் தலைப்பு 101 | - மீண்டெழும் மற்றும் பராமரிப்பு பணிகள் | - | 5.00 |
| செலவினத் தலைப்பு 102 | - பொருட்கள், உபகரணங்கள் நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், கையேடுகளைப் பெற்றுக் கொள்ளல் | - | 9.15 |
| செலவினத் தலைப்பு 103 | - கட்டிட நிர்மாணிப்பு | - | 32.76 |
| | அறிவு விருத்தி மற்றும் நிறுவன ஊக்குவிப்புப் பணிகள் | - | 3.28 |
| முழு மொத்தம் (மூலதனம்) | | | 50.19 |

**வருமானம்**

2012 கணக்காண்டுக்கு மீண்டெழும் உதவியாக அரசினால் கிடைக்கப்பெற்ற நிதி ரூபா. 127,600,000 ஆகும்.

விஞ்ஞான நிறுவகத்தின் ஆண்டுக்கான ஏனைய மீண்டெழும் வருமான மார்க்கங்களின் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ரூபா. 15,780,657 ஆகும். இதற்கான மொத்த வருமானம் ரூபா. 143,380,657 ஆகும்.

**செலவினம்**

2012ம் ஆண்டுக்கான மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா. 168,611,950 ஆகும். இதற்காக ஆண்டின் வருமானத்தை விட கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் ரூபா. 5,483,665 ஆகும்.

**நிலையான சொத்துக்களின் தேய்மானம்**

நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் தேய்மானத்திற்காக 2012ம் ஆண்டில் ரூபா. 19,747,628 ஒதுக்கப்பட்டுள்ளது.

**மூலதன சேவை நிதி ஒதுக்கீடு**

**செலவினத் தலைப்பு 101 - புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள்**

புனரமைப்பு மற்றும் பராமரிப்புச் செலவினத் தலைப்பு (101) இற்காக கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்ட நிதி ரூபா. 6,700,000 என்பதுடன் இதன் மூலம் 2012ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா. 5,020,466 ஆகும்.

**செலவினத் தலைப்பு 102 - பொருட்களை பொறுப்பேற்றல்**

சொத்துக்களைப் பொறுப்பேற்கும் செலவினத் தலைப்பு 102 இற்காக கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டு நிதி ரூபா. 4,210,000 என்பதுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ஒதுக்கீடுகளுடன் ரூபா. 9,147,243.94 ஆகும்.

**செலவினத் தலைப்பு 103 - நிர்மானப் பணிகள்**

நிர்மானச் செலவினத் தலைப்பு (103) இற்காக கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டு நிதி ரூபா. 11,100,000/- என்பதுடன் அதன் ஒதுக்கீடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா. 32,758,339.36 ஆகும்.

**அறிவு விருத்தி மற்றும் நிறுவன தாபன ஊக்குவிப்புக்கள்**

அறிவு விருத்தி மற்றும் தாபன அபிவிருத்தி செயற்றிட்ட செயலாளர் தலைப்பிற்கான ஒதுக்கிட்டு நிதி ரூபா. 3,650,000/- என்பதுடன் 2012ம் ஆண்டில் இதற்காக செலவிடப்பட்ட மொத்த நிதிச் செலவினம் ரூபா. 3,272,038.01 ஆகும்.

**பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே**

**பணிப்பாளர்**

## 2012-12-31 திகதிக்கு நிதி நிலமையை காட்டும் அறிக்கை

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | ருபா | ருபா | ருபா | ருபா |
| **சொத்துக்கள்** | | | | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | | |
| (அ) காணிகள் | 72,126,250 | | 72,076,250 | |
| (ஆ) கட்டடங்கள் | 163,083,528 | | 94,597,077 | |
| (இ) அலுவலக உபகரணங்கள் | 4,642,250 | | 17,480,430 | |
| (ஈ)இரசாயனகூட உபகரணங்கள் | 23,858,556 | | 18,479,240 | |
| (உ)தளபாடங்கள் மற்றும் இணைப்புகள் | 16,170,147 | | 11,889,987 | |
| (ஊ)நூலக நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் | 6,177,639 | | 8,173,590 | |
| (எ) மோட்டார் வாகனங்கள் | 7,031,497 | | 9,254,799 | |
| (ஏ)இயந்திர உபகரணங்கள் | 3,695,535 | 296,785,401 | 1,495,026 | 233,446,399 |
| (ஐ)வேறு | | 1,361,857 | | 1,614,356 |
| (ஒ) அமுலில் உள்ள வேலைகள் | | 66,439,561 | | 102,426,246 |
| (ஓ)மூலதன முற்கொடுப்பனவு | | 6,003,579 | | 8,994,661 |
| **முதலீடு** | | | | |
| **நிலையான வைப்புகள்** | | 49,554,753 | | 21,929,511 |
| | | **420,145,150** | | **368,411,173** |

| | | | | |
|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| (அ)கலஞ்சிய முற்கொடுப்பனவு | 2,141,600 | | 1,765,401 | |
| (ஆ)கடனாளிகள் | 1,899,540 | | 1,497,840 | |
| (இ)கடன் மற்றும் முற்கொடுப்பனவு | 20,060,331 | | 19,715,790 | |
| (ஈ)கலப்பு முற்கொடுப்பனவு | 6,000 | | 173,529 | |
| (உ)ஆராய்ச்சி முற்கொடுப்பனவு | - | | 41,500 | |
| (ஊ)முற் செலுத்தல் | 10,287 | | 164,560 | |
| (எ)வங்கி மிகுதி | 19,564,634 | | 73,197,699 | |
| (ஏ)வங்கி மிகுதி ( வெளிவாரிப் பாடநெறி) | 5,860,067 | | 275,770 | |
| (ஐ)சிறு பண மீதி | 180 | | 180 | |
| (ஒ)வேறு சொத்துக்கள் | 4,451,894 | 53,994,532 | 1,637,710 | 98,469,979 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 474,139,682 | | 466,881,152 |
| **பொறுப்புகள்** | | | | |
| (அ)நடைமுறைப் பொறுப்புகள் | 440,310 | | 282,750 | |
| (ஆ)பணம் செலுத்தல் | 20,370,454 | | 17,114,279 | |
| இ. திட்டமிட்ட செலவு | 1,596,156 | 22,406,920 | 2,548,782 | 19,945,811 |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அ. மிகையூதியத்திற்காக ஒதுக்கீடு | | 37,599,840 | | 33,751,935 |
| மொத்தப்பொறுப்பு | | 60,006,759 | | 53,697,746 |
| மொத்த தேறிய சொத்துக்கள்.்.உரிமைகள் | | 414,132,923 | | 413,183,406 |
| அ. செலவு செய்த மூலதனம் | 242,277,765 | | 215,099,344 | |
| ஆ. செலவு செய்யாத மூலதனம் | 18,359,914 | | 42,898,001 | |
| இ. நிதியம் | (17,698,629) | | (14,356,181) | |
| ஈ. விசேட விடயங்களுக்கான உதவி | 171,193,873 | | 169,542,242 | |
| முழுத் தேறிய சொத்துக்கள் | | 414,132,923 | | 413,183,406 |

**பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே**

**பணிப்பாளர்**

**று.யு.னு.ளு.மொலகொட**

**பிரதி நிதிப் பொறுப்பாளர்**

## 2012.12.31 உடன் முடியும் ஆண்டுக்கான

## வரவு செலவு பற்றிய அறிக்கை

| | 2011<br>ருபா | ருபா | 2010<br>ருபா | ருபா |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | | |
| மீண்டெழும் உதவி | | 127,600,000 | | 111,099,108 |
| தேய்மானம் | | 19,747,628 | | 15,132,899 |
| வேறு வருமானம் | | | | |
| டூ1ரு கடன் மற்றும் முற்கொடுப்பனவு வட்டி | 671,479 | | 759,447 | |
| டூ2ரு பல்வேறு பெறல் | 322,777 | | 2,530,119 | |
| டூ3ரு வட்டி வருமானம் | 5,169,263 | | 880,624 | |
| டூ4ரு மாணவர் பதிவுக் கட்டணம் | 36,015 | | 111,875 | |
| டூ5ரு பரீட்சைக் கட்டணம் | 20,650 | | 4,050 | |
| டூ6ரு நூலக தண்டப்பணம் | 39,420 | | 69,904 | |
| டூ7ரு வைத்திய கட்டணம் | 24,660 | | 18,060 | |
| டூ8ரு சொத்துக்களில் பெற்ற கூலி வருமானம் | 210,728 | | 318,855 | |
| டூ9ரு வெளியீடு விற்பனை | 500 | | - | |
| டூ10ரு பழைய பொருள் விற்பனை (வாகனங்கள்) | 1,219 | | - | |
| டூ11ரு இணைப்புச் செயற்பாடுகள் | - | | - | |
| டூ12ரு வெளிவாரி பாடநெறி வருமானம் | 9,283,946 | | 4,855,636 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 15,780,657 | | 9,548,570 |
| | | **163,128,285** | | **135,780,577** |
| **செயற்பாட்டுச் செலவு** | | | | |
| நபர்களுக்கான சம்பளம் | 103,904,513 | | 95,133,199 | |
| போக்குவரத்துச் செலவு | 191,069 | | 189,848 | |
| வழங்கல் | 6,738,429 | | 5,527,468 | |
| பராமரிப்பு | 2,957,210 | | 2,957,349 | |
| ஒப்பந்தச் சேவைகள் | 21,714,708 | | 16,590,316 | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 450,846 | | 263,132 | |
| தேய்மானம் | 19,747,628 | | 15,132,899 | |
| வேறு செயற்பாட்டுச் செலவு | 4,119,569 | | 4,665,628 | |
| பாடநெறி செலவு | 8,787,978 | | 4,855,636 | |
| மொத்த செயற்பாட்டுச் செலவு | | **168,611,950** | | **145,315,475** |
| செயற்பாட்டு நடவடிக்கையால் ஏற்பட்ட மேலதிகம்(குறை) | | **(5,483,665)** | | **(9,534,898)** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | | | |

මගේ අංකය / எனது இல / My No. } சீஎ/எப் /ஜீட பள்யூஜஜ/எப்ஏ/2012  
ඔබේ අංකය / உமது இல / Your No. }  
දිනය / திகதி / Date } 2013 செப்தெம்பர் 26

பணிப்பாளர்  
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்.

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 இன் 1 ஆம் இலக்க கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவக கட்டளைகளின் 19 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2013 மே 31 ஆந் திகதி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை  
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 /034  
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No } 2887223  
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail } oaggov@sltnet.lk

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆண்டில் விசேட நன்கொடையாக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்திட்ட (HETC) நிதியத்திலிருந்து ரூபா 719,557 பெறுமதியான 999 புத்தகங்கள் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்டோலைகளின் படி இயந்திர உபகரணங்களின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 865,890 ஆக காணப்பட்ட போதிலும் அச்சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 73,748,992 தொகையான கட்டிடங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடர் கடன்கள், வாகனக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் ஏனைய ஊழியர் கடன்களிற்காக நிறுவகத்தினால் பேணிவரப்படுகின்ற கடன்கள் பதிவேட்டிற்கும் பொதுப் பேரேட்டின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிற்கும் இடையே பின்வருமாறு வேறுபாடுகள் காணப்பட்டன.

| விபரம் | பொதுப் பேரேட்டின் படி மீதி | | கடன்கள் பதிவேட்டின் படி மீதி | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப | இறுதி | ஆரம்ப | இறுதி | ஆரம்ப | இறுதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வாகனக் கடன் | 35,667 | 1,277,714 | 1,763,115 | 1,458,048 | 1,727,448 | 180,334 |
| கணனிக் கடன் | 1,129,500 | 1,240,000 | 1,063,500 | 1,228,000 | 66,000 | 12,000 |
| இடர் கடன் | 15,754,317 | 16,094,073 | 14,365,870 | 15,916,952 | 1,388,447 | 177,121 |
| விசேட இடர் கடன் | 392,572 | 103,020 | 392,572 | 980,252 | - | 877,232 |
| ஊழியர் கடன் | 282,880 | 9,650 | 293,590 | 341,150 | 10,710 | 331,500 |

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடித்து வைத்தல்கள் ரூபா 5,281,364 தொகையும் பல்வேறு பிணை வைப்புக்கள் ரூபா 175,250 தொகையும் செலுத்தப்படாத உறுதிச்சீட்டு வைப்புக்கள் ரூபா 22,450 தொகையுமாக ரூபா 5,479,064 கூட்டுத்தொகையான

பொறுப்புக்கள் 1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து நிலவி வருகின்ற போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அம்மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறா நிர்மாண வேலைகளாக ரூபா 66,439,561 தொகை ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு ஒப்பந்தங்களினதும் முடிவுறா வேலைப் பெறுமதிகளின் ஆரம்ப மீதிகள் மற்றும் மூலதனமாக்கலை தெளிவாக இனங்காணக்கூடிய விதத்தில் தனித்தனியான பேரேடுகள் அல்லது பட்டோலைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 104(2) | 2011 ஆகஸ்ட் 12 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த வாகனமொன்று தொடர்பில் ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கட்டணங்கள் அறவிடப்படுகின்ற 05 பாட நெறிகளை ஒழுங்கு செய்வதற்காக கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு அங்கீகாரமின்றி வழமையான கடமை நேரங்கள் மற்றும் வார இறுதி கடமைகளிற்காக ரூபா 8,787,108 தொகையான பல்வேறு படிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஆ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | 2012 ஆம் ஆண்டின் ஆராய்ச்சிப் படிகளாக 30 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 3,914,230 செலவிடப்பட்டிருந்ததுடன் 18 உத்தியோகத்தர் களால் மாத்திரம் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 133,083,665 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 120,634,006 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 127,600,000 ஆன அரசாங்க மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 5,483,665 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 111,099,108 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 9,534,898 வரை குறைவடைந்திருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் ரூபா 16,500,892 இனாலும் வட்டி வருமானம் ரூபா 4,288,639 ஆலும் அதிகரித்தமையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிறுவகப் பற்றாக்குறை ரூபா 4,051,233 ஆல் குறைவடைந்தமைக்கு விசேடமாக தாக்கம்ளித்திருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கற்கைச் செயலாற்றுகை

நிறுவகத்தில் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை ஐந்தாண்டு பட்டப் பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், கடந்த பத்து ஆண்டுகளில் பதிவுசெய்து கொண்டிருந்த 394 மாணவர்களில் 38 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்தனர். 265 மாணவர்கள் ஆண்டிறுதிப் பரீட்சைகளிற்கு தோற்றியிருந்ததுடன் அவர்களில் 219 பேர் சித்தியடைந்திருந்தனர்.

இதன் படி 2001/2002 ஆம் கல்வியாண்டு முதல் 2009/2010 கல்வியாண்டு வரை பதிவுசெய்து கொண்டிருந்த மாணவர் எண்ணிக்கையில் 02 சதவீதத்திற்கும் 41 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்ததுடன் 2010/2011 ஆம் கல்வியாண்டிற்கு அது 10 சதவீதமாகக் காணப்பட்டது.

### 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

**கட்டணங்கள் அறவிடப்பட்டு நடாத்தப்படும் பாடநெறிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரித்துக் கொள்ளப்படாத நியதிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தமைக்கு மேலாக மாதமொன்றிற்கு ரூபா 1,000 வீதம் நியதிகளில் குறிப்பிடப்படாத படியொன்று சில பாடநெறி போதகர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செலுத்தியிருந்த தொகை ரூபா 30,000 ஆக இருந்தது.

(ஆ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள நியதிகளின் 6.7 ஆம் பிரிவின் படி பாடநெறிகளை ஒழுங்குசெய்வதற்காக கல்விசார் பதவியணியனருக்கு கொடுப்பனவுகளைச் செய்கையில் அரசாங்க விடுமுறை தினங்களில் வழங்கிய சேவைக்காக நாளொன்றிற்கு ரூபா 5,000 வீதமான உச்ச வரம்பிற்கு உட்பட்டு வருகைதந்த நாட்களிற்காக செலத்தப்பட முடியுமான போதிலும் நாளொன்றிற்கு ரூபா 3,000 முதல் ரூபா 5,000 இற்கு இடைப்பட்ட வீச்சில் 04 பாடநெறிகளினால்

கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. அதன் படி திறைசேரியின் அங்கீகாரமின்றி உள்ளகச் சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த நியதிகளிற்கும் முரணாக ரூபா 281,000 மேலதிகமாக செலத்தப்பட்டிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2010 செப்தம்பர் 28 ஆந் திகதி நிறுவகத்தினால் கம்பியற்ற நேரடி மற்றும் உள்ளகத் தொலைபேசி முறைமையொன்றை ரெலிகொம் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்காக ரூபா 277,140 செலுத்தப்பட்டிருந்ததுடன் முறைமையிலிருந்த குறைபாடு காரணமாக தொடர்பாடலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதனால் இலவசமாக PABX முறைமையொன்றை வழங்குவதற்கு ரெலிகொம் நிறுவனம் இணங்கியிருந்த போதிலும் வழங்கியிருந்த தொலைபேசிகளை மீண்டும் வழங்கியிருக்காமை மற்றும் மாதாந்த வரி மற்றும் சிட்டைப் பெறுமதி ரூபா 176,805 இனை செலுத்தியிருக்காமை காரணமாக PABX முறைமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

### மீள ஒப்படைக்கப்படாத நூலகப் புத்தகங்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசார் பதவியணியினர் மற்றும் 74 மாணவர்கள் எடுத்துச்சென்றிருந்த ரூபா 30,090 பெறுமதி கொண்ட 127 புத்தகங்கள் 2013 யூன் 28 ஆந் திகதி வரைக்கும் மீள ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 113,526 ஆகும். இப்புத்தகங்களை அல்லது பணத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது நூலக வைப்புக்களிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 முறைப்படியாக கையேற்கப்படாத காணிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வதுபிடிவலயில் அமைந்துள்ள 05 ஏக்கர், 03 ரூட், 21.32 பேர்சர்ஸ் மூலிகைத் தோட்டம் நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதன் தீர்ப்பனவு உரித்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 ஆகஸ்ட் 21 ஆந் திகதி காணிகள் அமைச்சிலிருந்து ரூபா 9,263,000 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 205.42 பர்சர்ஸ் காணி 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,540,651 என குறைப் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 04 ஆம் இலக்க காணியின் கீழ் காணப்பட்ட 419.2 பேர்சர்ஸ் மொத்தமான காணிகள் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் உரித்துறுதியும் நிறுவகத்திடம் காணப்படவில்லை. அக்காணிகளின் உரித்தினை தீர்த்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வழங்கப்பட்டிருந்த வேலைகள் அத்தியட்சகர் அறிக்கையின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த காணியொன்று நிறுவனத்திடம் காணப்படாமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு 2013 யூன் 28 ஆந் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி 3 ஆம் இலக்க காணியின் கீழ்ான காணிகளின் மொத்த விஸ்தீரணம் 967.04 பேர்சர்ஸ்கள் ஆன போதிலும் வேலைகள் அத்தியட்சகர் அறிக்கையின் படி அவற்றின் மொத்த விஸ்தீரணம் 1967.41 பேர்சர்ஸ்களாக காணப்பட்டமையால் 1000.37 பேர்சர்ஸ் வேறுபாடு காணப்பட்டது. அவ்வாறே நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிலுள்ள 143.02 பேர்சர்ஸ் காணி அத்தியட்சகர் அறிக்கையின் படி 107.76 பேர்சர்ஸாக காணப்பட்டமையால் 35.26 பேர்சர்ஸ் வேறுபாடு நிலவியது.

**4.6 பதவியணி நிர்வாகம்**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையுடன் தற்போது நிறுவகத்தில் காணப்படும் உள்ளபடியான பதவியணினை ஒப்பிடுகையில் பின்வருமாறு வெற்றிடங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கல்விசாரா | | | |
| எழுதுவினைஞர் மற்றும் அதனையொத்த | 20 | 15 | 05 |
| கனிஷ்ட | 17 | 08 | 09 |
| கல்விசார் | | | |
| சிரேஷ்ட விரிவுரையாளர் II | 27 | 20 | 07 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் I | 06 | 03 | 03 |
| விரிவுரையாளர் (தொண்டர்) | 04 | 03 | 01 |
| | 74 | 49 | 25 |

அடிப்படை கோட்பாடுகள் பிரிவு மற்றும் சித்த மருத்துவம் போன்ற பிரிவுகளில் மாத்திரம் 13 கல்விசார் பதவியணி வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன.

**4.7 ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்**

ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக ரூபா 37,599,840 ஆன நிதியமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான செயற்பாடுகள் 68 ஆகும். இக்கருமங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் தயாரிக்கப்பட்டிருந்த நிறுவகத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த செயற்பாடுகளில் ஆண்டின் இறுதி வரை அமுலாக்கப்படாதிருந்த 18 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு முடிவுறுத்துவதற்குத் தவறவிடப்பட்டு காலதாமதம் செய்யப்பட்டிருந்த செயற்பாடுகள் 23 ஆகும்.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட 68 செயற்பாடுகளில் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட்ட செயற்பாடுகள் 12 மாத்திரமாகும். அதன் படி எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் நிறுவகத்தினால் ஆண்டின் போது அடைந்துகொள்ள முடியுமாகக் காணப்பட்ட செயற்பாடுகள் 18 சதவீதம் மாத்திரமேயாகும். இதற்கமைய செயற்திட்ட நடவடிக்கைச் செயற்பாடுகளில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவை மீளாய்வாண்டில் அடைந்து கொள்ள முடியாமல் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பிடுகையில் 10 சதவீதம் முதல் 145 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் மீதான அவதானிப்புகள்

2008 ஆம் ஆண்டில் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை ஆயுர்வேத திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தினால் அந்த வைத்தியசாலைக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,989,577 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை மீள்நிரப்பப்படாதிருந்தது. அத்தொகை பெறவேண்டிய நீர்க் கட்டணம் என நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவில் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 28 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் மீது விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் நிர்வாகம்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர்,
கணக்காய்வாளர் திணைக்களம்,
இல 306.:.72, பெல்துவ வீதி,
பத்தரமுல்ல.

**<u>களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் 108(1) உப வாசகத்திற்கமைய கணக்காய்வாளர் அறிக்கை</u>**

மேற்குறிப்பிட்ட அறிக்கை தொடர்பில் ஏற்கனவே நிறுவனத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகளை இத்தால் தெரிவிக்கிறேன்.

1.2. **<u>நிதி வெளிப்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவ பொறுப்புக்கள்</u>**

1.3. **<u>கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்</u>**

1.4. **<u>தரக்கணிப்பீட்டுக்குரியதான கணக்காய்வுகளுக்கான அடிப்படைகள்</u>**

**2. <u>நிதி வெளிப்பாடுகள்</u>**

2.1. **<u>கணக்காய்விற்கான கருத்துரைகள்</u>**

2.2. **<u>நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்</u>**

2.2.1. **<u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**

ர்நுவுஊ செயற்றிட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மற்றும் அதன் பெறுமதி நிறுவனத்தின் நிலையான சொத்து ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு அதற்கான கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

2.2.2. **<u>ஒப்பீடு செய்யப்படாத நிறுவனக் கணக்கு</u>**

(அ). நிலையான சொத்து ஆவணத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி சமநிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் காணப்பட்ட வகைப்படுத்தல் குறைபாடுகளைத் திருத்தியமைத்து மறுசீரமைக்கப்பட்ட உப ஆவணம் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ). நிறுவனத்தில் பேணப்படும் கடன் பட்டியல் நிலுவையான பொது நாளேட்டின் கடன் நிலுவையுடன் சமநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

2.2.3. **செலுத்த வேண்டிய கணக்கு**

ஏதேனும் ஒரு விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்த தேக்கி வைக்கப்பட்ட நிதியில் ரூபா. 469,186/- ம் பல்வகை பிணை வைப்பு நிதியில் ரூபா. 147,950/- ம் செலுத்தப்படாத பவுச்சர் வைப்புக்களின் மொத்த நிதியும் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளதுடன் கடன் நிலுவையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.4. **கணக்காய்விற்கான சாட்சிகள்**

அமுலில் உள்ள நிர்மானக் கைத்தொழிலை தெளிவாக இனங்காணக்கூடியவாறு அவ்வவ் ஒப்பந்தத்திற்காக தனித்தனியாக குறிப்புக்களுடன் ஆவணம் பேணப்படுகின்றது.

2.2.5. **சட்டம், ஒழுங்குகள், கோவை மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஒவ்வாமை**

(அ) **நிதிக் கோவை 104 (2)**

நி.யோ. 104 (2) இற்காக எதிர்வரும் காலங்களில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள இணங்குகிறேன்.

(ஆ) **1994 ஜூன் 14ம் திகதிய மற்றும் இலக்கம் 95 கொண்ட அரச வர்த்தகம் தொடர்பான சுற்றறிக்கை**

பொதுவான கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் வெளிப்பாட நெறிச் செயற்பாடுகளை கிரமமாக முன்னெடுக்கும் நோக்குடன் அப்பணிகளில் ஈடுபட்டுள்ள கல்வி, கல்வி சாரா பணியாளர் சபைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அக்கொடுப்பனவு நிறுவனத்தின் நிதிக்குழு மற்றும் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய வரவு செலவு மதிப்பீடுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) **2013 ஜூன் 2ம் திகதி மற்றும் இலக்கம் 12 கொண்ட அரச வர்த்தகத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.1 வாசகம்**

நிதி வெளிப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் போது அதனுடன் வருடாந்த அறிக்கை (வரைபினை) சமர்ப்பிக்க இணங்குகிறேன்.

(ஈ) **2011 ஏப்ரல் 7ம் திகதி இலக்கம் 45 கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை**

ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையின் சுற்றறிக்கைக்கமைய இணங்குவதாக அறிவிக்கிறேன்.

03. **நிதி மீளாய்வுகள்**

3.1. **நிதி முன்னேற்றங்கள்**

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1. **கற்கை செயற்சாதனை**

பாடநெறியை விட்டு விலகும் விகிதாசாரத்தை மட்டுப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.2. **செயற்பாடுகள் வினைத்திறன் இன்மை**

**கட்டணம் அறவிடப்படும் பாடநெறி**

(அ) நேரடித் தொலைபேசி வசதிகள் வழங்கப்படாதுள்ள அனுசரனையாளர்களுக்கு பாடநெறியின் செயற்பாடுகளை கிரமமாக மற்றும் வசதியுடன் முன்னெடுக்கும் நோக்குடன் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகளுக்கமைய வெளிப்பாடநெறி நிதியத்தின் மூலம் தொடர்பு சாதனக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

(ஆ) வெளிப்பாட நெறிச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக (அரச விடுமுறை தினம்) நாளொன்றிற்கு ரூபா. 5000/- உயர்ந்த பட்சத்தின் கீழ் சமூகமளிப்பு தினங்களின் எண்ணிக்கைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.3. **பொருளாதாரம் அல்லாத கொடுக்கல் வாங்கல்**

உரிய நிதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிய தொலைபேசித் தொகுதியினை பெற்றுக் கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

4.4. **இனங்காணப்பட்ட குறைபாடுகள்**

**கையளிக்கப்படாத நூலக நூல்கள்**

தற்போது பெற்றுக் கொள்ள எஞ்சியுள்ள புத்தகங்கள் எண்ணிக்கை 122 என்பதுடன் அப்புத்தகங்களின் அளவினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

4.5. **விரிவான அடிப்படையில் சுவிகரிக்கப்படாத காணி**

(அ) அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியின் ஒப்பத்துடன் இலவசக் கொடுப்பனவுப் பத்திரத்தின் கீழ் இக்காணி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள உப ஆவணத்தில் அச்சுக் குறைபாடுகள் ஏற்பட்டிருந்த போதிலும் இதன் பெறுமதி சரியாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(இ),(ஈ),(உ). காணிகள் தொடர்பில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.6. **பணியாளர் சபை நிர்வாகம்**

தற்போது விரிவுரையாளர்கள் (பயிலுனர்) பதவிகளுக்கமைய ஆட்சேர்ப்புக்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய ஆட்சேர்ப்புகளுக்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.7. **ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டு நிதியினை கட்டியெழுப்புதல்**

ஊழியர் பணிக்கொடைக்கான வருடாந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கான நிதியத்தை கட்டியெழுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. **<u>கணக்குச் செயற்பாடுகள் மற்றும் சிறந்த நிருவாகம்</u>**

5.1. **<u>செயற்பாட்டுத் திட்டங்கள் - 2012</u>**

(அ),(ஆ). ஆண்டுக்குள் நிறுவனத்திற்கு விடுவிக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளுக்காக முன்னுரிமை அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

5.2. **<u>வரவு செலவு ஆவண நிருவாகம்</u>**

வரவு செலவு ஆவணத்தை முகாமைத்துவ நிருவாக செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.

5.3. **<u>வருடாந்த அறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்</u>**

2010 மற்றும் 2011 வருடாந்த அறிக்கை 2013.07.24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5.4. தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு வாசகம் தொடர்பான மேற்பார்வைகள்

இது தொடர்பில் ஆயுர்வேத ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இந்நிதி பங்கு அடிப்படையில் வழங்குவதற்கு ஆயுர்வேத ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கிறேன்.

6. முறைமை மற்றும் நிருவாகம்

கணக்காய்வாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த முறைமை மற்றும் நிருவாகக் குறைபாடுகளை முடியுமான வரை கட்டுப்படுத்த விசேட கவனம் செலுத்தப்படும் என அறிவிக்கிறேன்.

**பணிப்பாளர்,**

**பேராசிரியர் ஜனிதா ஏ. லியனகே**

பிரதிகள் - 01. உபவேந்தர் - களனி பல்கலைக்கழகம்
02. தவைலர் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபை
03. செயலாளர் - உயர் கல்வி அமைச்சு
04. செயலாளர் - நிதி திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு